சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 73/2023

பெயர். திரு.அருள் குமார் நாள்.24.11.2025
த/பெ.

<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி</u>

விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கையின் இணைய வழி நகல் **ம.த.சா.ஆ.1.** என்னுடைய விபத்துப் பதிவேட்டு நகல் **ம.த.சா.ஆ.2**. செங்கல்பட்டு அரசு மருத்துவமனை வழங்கிய வெளியேற்று குறிப்புரையின் சான்றிட்ட நகல் **ம.த.சா.ஆ.3**. என்னுடைய வாகனத்தின் பதிவு சான்றிதழ் **ம.த.சா.ஆ.4.** 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் இணைய வழி நகல் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் ஓட்டுநர் உரிமத்தின் நகல்கள் **ம.த.சா.ஆ.5 மற்றும் 6**. என்னுடைய ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்கள் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) **ம.த.சா.ஆ. 7 மற்றும் 8**.

<u>2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. விபத்து சம்பந்தமாக நான் புகார் அளிக்கவில்லை என்றால் புகார் அளிக்க சென்றேன் அவர்கள் பதிவு செய்யவில்லை. ம.த.சா.ஆ.1ல் என் பெயரில் தான் புகாரளிக்கப்பட்டது என்றால் சரிதான். என் புகாரை வாங்க மறுத்ததற்காக மேல் நடவடிக்கை நான் எடுக்கவில்லை. ம.த.சா.ஆ.1யை ரத்து செய்ய நான் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. ம.த.சா.ஆ.1யை வைத்து தான் வழக்கு நடத்திவருகிறேன் என்றால் சரிதான். மதுராந்தகம் நீதிமன்றத்தில் நான் ரூ.1500 அபராதம் கட்டினேன். அந்த தொகையை என் வாகனத்தை எடுப்பதற்காக செலுத்தினேன். என் இரு சக்கர வாகனத்தின் பதிவு எண் TN 19 U 9228. என்னுடைய ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை, எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை.

2. என் வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தாக்கல் செய்யவில்லை. மனு 2023ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து என்னுடைய அதிவேகம் மற்றும் அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்றும் அதனால் தான் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. மதுராந்தகம் குற்றவியல் நீதிமன்றத்தில் நான் அதிவேகமாக வாகனத்தை இயக்கியதை ஒப்புக்கொண்டு தொகை செலுத்தியதை ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்து என் மீது குற்ற அறிக்கை தாக்கல் செய்தனர் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணையை ஒப்புக் கொள்கிறார்.